அ.வ.எண். : 171/2010

வா.சா. : 1

பெயர் : கௌரம்மா

தேதி : 25.03.2019

**முதல் விசாரணை :** நான் வழக்கின் வாதி. அச்செட்டிபள்ளி கிராமத்தில் வசித்து வருகிறேன். எனது தரப்பு சாட்சியத்தினை நிரூபண பிரமாண பத்திரிக்கையின் மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் நன்கு தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது. அதனை எனது சாட்சியத்தின் ஒரு பாகமாக ஏற்றுக் கொள்ளும்படி பிரார்த்திக்கிறேன். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். 23.02.2009-ம் தேதியிட்டு ஒசூர், தலைமை துணை வட்டாட்சியர் அவர்களால் வழங்கப்பட்ட பட்டா, சிட்டா எண். 963(கணினி மூலம் பெறப்பட்டது ) அசல் **வா.சா.ஆ.1**. 25.11.2008-ம் தேதியிட்டு ஒசூர், தலைமை துணை வட்டாட்சியர் அவர்களால் வழங்கப்பட்ட பட்டா, சிட்டா எண். 764 (கணினி மூலம் பெறப்பட்டது) அசல் **வா.சா.ஆ.2.** 24.07.2010-ம் தேதியிட்டு வாதிகள் பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிக்கை அலுவலக நகல் **வா.சா.ஆ.3.** 24.07.2010-ம் தேதியிட்டு சட்ட அறிக்கை தபால் மூலம் அனுப்பிய அஞ்சலக ரசீது நகல் (1 முதல் 7 வரை) அசல் **வா.சா.ஆ.4.** 2, 3, 4,6-ம் பிரதிவாதகிள் சட்ட அறிக்கையை பெற்றதற்கான ஒப்புகை அட்டை அசல் **வா.சா.ஆ.5.** எனது தரப்பு சாட்சியத்தினை ஆவணங்கள் மூலம் நிரூபணம் செய்துள்ளேன். வழக்குரையில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

**குறுக்கு விசாரணை :** பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம் /- **K.** கார்த்திக்
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர் எண்.1, ஒசூர்.